1981 ஜனவரி 28]

[முற்பகல் 10-10]

திரு. கே. எம். தங்கமணி கவுண்டர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆலை உற்பத்தியைத் துவக்குகிற போது அதற்கான பணியாட்கள் எடுக்கின்ற நேரத்தில், அந்த ஆலை பின்தங்கிய இடத்தில் இருப்பதால், அந்த ஆலையைச் சுற்றி இருக்கிற பிற்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முன்னுரிமை கொடுத்து வேலை தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக எந்தத் தொழிற்சாலை ஆரம்பித்தாலும் அந்தந்த மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் தான் பணியாட்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆகவே, அந்தப் பகுதியில் உள்ள கூட்டுறவு நூற்பாலைக்குத் தொழிலாளர்கள் எடுக்கிறபோது, அந்தப் பகுதியில் உள்ளவர்களுக்கு அதிகமாக முன்னுரிமை கொடுக்கப்படும்.

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தென்னார்காடு மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு நூற்பாலையில் எத்தனைபேர் புதிதாக வேலைக்கு எடுக்கப் போகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் இருக்கிற நூற்பாலைக்கு ஆட்கள் எடுக்கிற போது 5 கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ள கிராம மக்களுக்கு மட்டும் தான் வேலை வாய்ப்பு அளிக்கப்படும் என்கிற உத்தரவாதத்தை அமைச்சர் அவர்கள் தருவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : எந்தக் கூட்டுறவு நூற்பாலை பற்றிக் கேட்கிறீர்கள்?

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : செஞ்சித் தொகுதியில் உள்ள சாரம் கூட்டுறவு நூற்பாலை பற்றிக் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தனிக்கேள்வி போட்டால் அதற்கான விரிவான பதில் தரப்படும்.

மதுராந்தகத்தில் காகிதஆலை

வினா எண் 79— திரு. எஸ்.டி. உகம்சந்த் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் காகித ஆலை துவக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

(ஆ) காகித ஆலை எப்பொழுது முதல் இயங்க ஆரம்பிக்கும்?

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு: (அ) இத்திட்டத்திறகென தொழில் நுட்ப ஆலோசனைகள் அளிக்க ஒரு நிறுவனத்தை நியமனம் செய்யவும், காகித தொழில் நுட்பர் ஒருவரை நியமனம் செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஆ) உத்தேசமாக 1982ஆம் ஆண்டு இவ்வாலை இயங்கத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எஸ். டி. உகம்சந்த் ; பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலை துவக்குகிற நேரத்தில் அங்கே வாழ்கிற அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுமா? எவ்வளவு பேருக்கு அந்த ஆலை மூலம் வேலை வாய்ப்பு கிடைக்கும்? ஆலைக்கான மதிப்பீடு தொகை எவ்வளவு? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான மதிப்பீடு ரூ. 200 லட்சமாகும். இந்த ஆலை 1982-ம் ஆண்டு இயங்கத் தொடங்கும். வேலைக்கு ஆட்கள் எடுப்பதைப் பொறுத்தவரையில், நான் ஏற்கனவே தெரிவித்த விதிமுறைகளின் அடிப்படை பின்பற்றப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு கெ. சொக்கலிங்கம் : தலைவர் அவர்களே, மதுராந்தகம் சக்கரை ஆலைக்குப் பக்கத்திலே தொடங்க இருக்கும் காகிதத் தொழிற்சாலைக்கு நில ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதா? எவ்வளவு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ், திருநாவுக்கரசு ; மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குப் பக்கத்திலே இடம் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இன்னும் நில ஆர்ஜிதம் செய்யப்பட வில்லை. விரைவில் ஆர்ஜிதம் செய்யப்படும்.

அரிசனங்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள்

வினா எண் 80—திரு தி.கா. நல்லப்பன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பல இடங்களில் அரிசனங்கள் குடியிருப்பிற்கு பட்டா கொடுக்கும்போது அதிகாரிகள் இடத்தை அளந்து விடாமல் பட்டாவை மட்டும் கொடுத்து விடுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில் பட்டா கொடுக்கும் போதே இடமும் அளந்துவிட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அரசு உத்தர விடுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY · வாய்மையே வெல்லும் · TRUTH ALONE TRIUMPHS